www.freetnbooks.com

# அரையாண்டுத் தேர்வு – 2025

Extra

**11 ஆம் வகுப்பு** **பொதுத்தமிழ்**

காலம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதவும்.

14 x1 = 14

1. 'உயிர்த்தெழும் காலத்துக்காக' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்.........
   அ. சு. வில்வரத்தினம் ஆ. இந்திரன் இ. அப்துல் ரகுமான் ஈ. இன்குலாப்
2. மனோன்மணீயம் நாடகத்தில் இயற்கையுடன் தனிமொழி பேசிய கதாபாத்திரம்...........
   அ. சுந்தரமுனிவர் ஆ. ஜீவகன் இ. நடராசன் ஈ. குடிலன்
3. சீறாப்புராணத்தின் ஆசிரியர்.........
   அ. பனுஅகமது மரைக்காயர் ஆ. உமறுப்புலவர்.
   இ. கடிகை முத்துப்புலவர் ஈ. சீதக்காதி
4. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க
   அ. மக்கள் அலைஆ. உயிர் அலை இ. மக்கள் வெள்ளம். ஈ. மக்கள் அவை
5. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பைத் தேர்க...........
   அ. மொழி பெயர்ப்பாளர்
   ஆ. பிரெஞ்சு ஆளுநரின் தலைமை மொழி பெயர்ப்பாளர்
   இ. இந்தியாவின் பெப்பிசு ஈ. உலக நாள் குறிப்பு இலக்கியத்தின் தந்தை
6. பொருள்களைத் தனித்தனியாக் குறிப்பிடும் இடங்களில் பயன்படுத்தும் நிறுத்தக்குறி
   அ. முற்றுப்புள்ளி ஆ. காற்புள்ளி இ. அரைப்புள்ளி ஈ. முக்காற்புள்ளி
7. 'தாவி' – இலக்கணக் குறிப்பைத் தேர்க.
   அ. வினையெச்சம் ஆ. பெயரெச்சம் இ. முற்றெச்சம் ஈ. பண்புத்தொகை
8. ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு...........
   அ. பகுதி ஆ. விகுதி இ. சந்தி ஈ. இடைநிலை
9. SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயர்.........
   அ. கப்பல் ஆ. படகு இ. நாவாய் ஈ. தொங்கான்
10. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும்.........
    அ. ஆழி ஆ. மதி இ. கம்பு ஈ. வளை
11. 'பேசு' என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சத்தைத் தேர்க
    அ. பேசியவன் ஆ. பேசின இ. பேசி ஈ. பேசிய
12. பிழைத் திருத்தத்தில் DI இக்குறியீடு உணர்த்தும் பொருள்
    அ) ஒற்றை மேற்கோள் குறியிடுக
    ஆ) தடித்த எழுத்தில் மாற்றுக
    இ) சொற்களுக்கிடையே இடைவெளி தருக
    ஈ) சொல்லலையோ எழுத்தையோ நீக்குக



www.freetnbooks.com | FREETNBOOKS

13. கூற்று - 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

விளக்கம் - 'கோடு' என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ. கூற்று சரி; விளக்கம் தவறு ஆ. கூற்றும் சரி; விளக்கமும் சரி

இ. கூற்று தவறு; விளக்கம் சரி ஈ. கூற்றும் தவறு; விளக்கமும் தவறு

14. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து -------- நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை.

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

## பகுதி – II (பிரிவு–1)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3 x 2 = 6

15. 'உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ' – தொடரின் பொருள் யாது?
16. காவடிச்சிந்து என்பது யாது?
17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?
18. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்

தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"

– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

## பிரிவு– 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 x 2 = 4

19. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைப்பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக

## பிரிவு –3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக. 7 x 2 = 14

22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

அ. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

ஆ. ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

அ. கலை, களை, கழை ஆ. குரை, குறை

24. புணர்ச்சி விதி எழுதுக. (ஏதேனும் ஒன்று)

அ) நீரோடை ஆ) திருப்புகழ்

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மமைத் தீமைகளை புரிந்து பேசுவர்

ஆ. சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

26. தமிழாக்கம் தருக.

அ) Earth Environment ஆ) Document



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

அ. நிறைகுடம் ஆ. கானல்நீர்

28. அடைப்புக்குள் உள்ளவாறு தொடர்களை மாற்றம் செய்க

அ. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத் தொடராக்குக)

ஆ. என்னே மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)

29. கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக

30. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக. (ஏதேனும் ஒன்று)

அ) முளைத்த ஆ) அணிந்தேன்

## பகுதி-III (பிரிவு-1)

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 x 4 = 8

31. க. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32. விரும்பியதை அடைவது? எப்படி குறள் வழி விளக்குக.

33. 'சேர நாடு செல்வவளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

34. 'உயர்த் தமிழை உயிரென்று போற்றுமின்கள்' – இடஞ்சுட்டி பொருள் விளக்கம் எழுதுக.

## பிரிவு-2

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 x 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக

37. கல்வியால் நீ அடைந்த சிறப்புகளைப் பத்து வரிகளில் எடுத்துரைக்க.

38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

## பிரிவு-3

குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. 3 x 4 = 12

39. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவது.

இ) காலத்துக்கேத்த மாறிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

40. "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைக்கொல்லும் காழ்த்த இடத்து" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக

41. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக :

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) – _____



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - ----------
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - ----------
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் ? (தாரி)- ---------

42. தமிழாக்கம் தருக.

அ) The pen mightier than the sword.

ஆ) A picture is worth a thousand words.

இ) Education is the most powerful weapon, which you can use to change the world.

ஈ) A nation's culture resides in the hearts and in the soul of its people.

43. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்து எழுதி, ஏற்புடைய மூன்று நயங்களைச் சுட்டி எழுதுக.

'தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?
யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ

– பெ. தூரன்

## பிரிவு–IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 3x6=18

44. அ) மருந்து, மருத்துவர், மருத்துவம் குறித்துத் திருக்குறள் தரும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க

(அல்லது)

ஆ) 'தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்' என்பதை நிறுவுக.

46. அ) தமிழ் மொழிக்கு அயல்நாட்டவர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

47. அடிபிறழாமல் எழுதுக. 4 +2 = 6

அ) சிற்றூரும் ... எனத் தொடங்கும் புரட்சிக்கவிப் பாடல்

ஆ) 'கெடும்' என முடியும் திருக்குறள்.



www.freetnbooks.com | FREETNBOOKS